செய்ய ஆரம்பித்தால் வேறு பல புதிய பிரச்னைகள் பிறக்கும், ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஸ்டேட் ரீ-ஆர்கனைஸேஷன் ஆக்டின் படி திருவிதாங்கூர்-கொச்சி ஸ்டேட்டில் பணிசெய்தவர்கள் தமிழ் நாட்டுக்கு மாற்றப்பட்டிருப்பார்களேயானால், ஏற்கனவே அவர்கள் என்னென்ன நன்மைகளைப் பெற்றுக்கொண்டு இருந்தார் களோ, அல்லது அவர்கள் அங்கேயே தொடர்ந்து இருந்தால் அவர்களுக்கு என்ன நன்மை கிடைத்திருக்க முடியுமோ அவை கொடுக்கப்படும், அவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற அஷ்ஷூரன்ஸ் அந்தச் சட்டத்தில் இருக்கிறது. ஆக, இந்த புதிதாக தமிழ்நாடு ஸ்டேட் ஜி.ஓ. வந்ததால் அவர்கள் பாதிக்கப் படுகிறார்கள் என்று சொன்னால் அந்த ஜி.ஓ. வை மாற்றி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் வருகிறது. கோர்ட்டுக்குப் போனால் இந்த ஜி.ஓ. நிற்காது. ஆகவே இந்த ஜி.ஓ. வை மாற்றி அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஜி.ஓ.வைத் தவறாகப்புரிந்து கொண்டிருக்கிறார்கள். திருவிதாங்கூர் — கொச்சியில் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஊதியத்தை எல்லாம் பரிசீலித்து, அதை வழங்குகின்ற முறையில் தான் இப்போதும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் மினி பஸ் போக்குவரத்து.

* 745 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

> தஞ்சை மாவட்டத்தில் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மினி பஸ்களை போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தற்சமயம் இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள சாலைகள் எல்லாம் மிகவும் குறுகலான சாலை களாக இருக்கின்ற காரணத்தினால் பெரிய பேருந்துகள் செல்ல முடிவதில்லை. ஆகவே மினி பேருந்துகளை விட்டால் மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்பதை மனதிற்கொண்டு. தஞ்சை மாவட்டத்தில் அதிகமான மினி பேருந்துகளை விடுவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1978 மார்ச் 31]

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களுக்கு நலம் பயக்கும் மினி பஸ்கள் விட வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த அரசு செயல்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில், போத்தகுடி — முன்னவால்கோட்டை வழி, வாழச்சேரி, ரிஷியூர், பெரம்பூர், நீடாமங்கலம் ஆகிய பகுதிகளுக்குச் செல்வதற்கும், பட்டுக்கோட்டை — ஒரத்தநாடு வழி ஏனாதி, திருநல்லூர் ஆகிய பகுதிகளுக்குச் செல்வதற்குமாக இரண்டு வழித்தடங்களில் மினி பஸ்கள் விடுவது பற்றி அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. ஆனால், சோழன் போக்குவரத்துக் கழகம் அதை மேற்கொள்வது பற்றி இன்னும் ஏற்பாடாக வில்லை. அத்தோடு, தஞ்சாவூர், நீடாமங்கலம், நார்த் வீதியிலே உள்ள தனியார் ஒருவருக்கும் மினி பஸ் விடும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மினி பஸ்கள் ஓட்டுவதற்கான உத்தரவு எந்தெந்த மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், ராமேஸ்வரம், மதுரை மாவட்டத்திலே நிலக்கோட்டைப் பகுதி, வட ஆற்காடு மாவட்டத்திலே ஆற்காடு, வந்தவாசி ஆகிய இடங்களில் மினி பஸ்கள் விடுவதற்கு ஏற்கனவே அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆனால் அனைத்து மாவட்டங்களுக்கும் வருகின்ற ஆண்டில் படிப்படியாக, கிராம நலனைக் கருதி அங்கேயெல்லாம் மினி பஸ்கள் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, இந்த மினி பஸ்களில் எத்தனை பேர்கள் பிரயாணம் செய்ய முடியும் என்பதையும், இது லாபகரமாக இயங்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்ளே, மினி பஸ்கள் விடுவதில் மிகுதியான லாபத்தை எதிர்பார்க்க முடியாது. எனவே, வரியை மிகவும் குறைத்து சீட் ஒன்றுக்கு 50 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதிலே பிரயாணிகள் சுமார் 20 பேர்கள் பிரயாணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மினி பஸ்கள் விடும் திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சிற்றூர்களுக்கு விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, எற்கனவே நான் கூறிவிட்டேன். அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக இந்த அரசால் மேற்கொள்ளப்படும்.

[1978 மார்ச் 31

திரு. சீ. மு. வாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஓடிக் கொண்டிருக்கும் மினி பஸ்கள் நஷ்டத்தில் ஓடுவதாகக் கேள்விப்படுகிறேன். எனவே, இத் திட்டம் கைவிடப்படும் என்று பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. இதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, பரவலாகப்பேசப்படும் அளவுக்கு, பரவலாக மினி பஸ்கள் விடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே, மினி பஸ்கள் விடும் திட்டம் அரசினால் நடத்தப்படும் போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டும் உரிமம் அளிக்கப்படுகின்றதா? தனியார் நடத்தும் போக்குவரத்துக்கும் இந்த உரிமம் அளிக்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசினால் நடத்தப்படும் போக்குவரத்துக் கழகங்கள் இதை மேற்கொள்வதிலே சிக்கல் இருக்கின்றது. காரணம், நஷ்ட நிலைமையிலே போக்குவரத்துக் கழகங்கள் நடப்பதால், மினிபஸ்கள் விடுவது அவ்வளவு சரியான காரியமாகாது. பாண்டியன் போக்குவரத்துக் கழகம் லாபத்திலே ஓடுகின்ற காரணத்தினால், மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகியவைகளில் இந்த மினி பஸ்கள் விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் நஷ்டத்திலே இருக்கின்ற காரணத்தினால், வட ஆற்காடு மாவட்டத்தில் தனியாருக்கு இந்த உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ரயில்களில் மாணவர்கள் கல்வி-சுற்றுலாப் பிரயாணம் செல்லும் போது, சலுகைக் கட்டணமாக மூன்றில் ஒரு பங்கு செலுத்தப் படுவதுபோல், கிராமங்களிலே உள்ள மாணவர்கள் இப்படி கல்வி-சுற்றுலாப் பிரயாணம் மேற்கொள்ளும்போது, இந்தப் பேருந்துகளிலும், அரசுப் போக்குவரத்துக் கழகத்தினால் அம்மாதிரி கட்டணச் சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மினி பஸ்கள் விடுவதுதான் மூலக் கேள்வி என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.